பதிவுத் தபால்

## தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

---

**செயல்முறை ஆணை எண். 15141/டி3/2022, நாள்:18.11.2023**

பொருள்: நிர்வாகம் – தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் – அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, உதகமண்டலம் – (லேட்) திரு.ப.குமார், ஆய்வக உதவியாளரின் வாரிசுதாரர் (மகன்) திரு.கு.கௌரிசங்கர், என்பவருக்கு கருணை அடிப்படையில் கோவை, தொழில்நுட்பக் கல்வி கோட்டத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது – ஆணையர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (3ப) எண்.33. உயர்கல்வித் (சி2)த் துறை, நாள் 13.10.2023.

---

பார்வையில் காணும் அரசாணையில், கோவை, தொழில்நுட்பக் கல்வி கோட்டத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 27.01.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து (தற்போது உதகமண்டலம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி) பணிபுரிந்து வரும் திரு.கு.கௌரிசங்கர், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)–ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை (அசல்)

ஒம்/– கொ. வீர ராகவ ராவ்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

பெறுநர்
திரு.கு.கௌரிசங்கர்
இளநிலை உதவியாளர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
உதகமண்டலம் (முதல்வர் வழியாக)

நகல் :

1. முதல்வர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
உதகமண்டலம்.

தனியரின் 10ஆம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழ் (Cer.no.1068113 & 1188783) இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக்கொண்டதற்கான ஏற்பளிப்பினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. செயற்பொறியாளர்,
தொழில்நுட்பக் கல்வி கோட்டம்,
கோவை (தகவலுக்காக)

3. டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/11/2023
உதவி இயக்குநர் (நிருவாகம்)

20-11-2023

## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – உதகமண்டலம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஆய்வக உதவியாளராக பணியாற்றிய திரு.ப.குமார் என்பவர் பணியிடை மரணமடைந்ததையடுத்து அவரது வாரிசுதாரர் (மகன்) திரு.கு.கௌரிசங்கர், என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது– பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

## உயர்கல்வி (சி2) த் துறை

அரசாணை (3ப) எண்.33 நாள். 13.10.2023.

சோபகிருதுவருடம், புரட்டாசி - 26

திருவள்ளுவர் ஆண்டு - 2054

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணை எண். 14519/டி3/2018, நாள்.24. 01.2022.
3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண்.15141/டி3/2022, நாள். 30.06.2022.

----

ஆணை:-

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதத்தில், உதகமண்டலம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஆய்வக உதவியாளராகப் பணியாற்றிய திரு.ப. குமார் என்பவர் பணியிலிருக்கும் போது 24.10.2015 அன்று பணியிடை மரணமடைந்துவிட்டதால், அவரது மகன் திரு.கு.கௌரிசங்கர் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு கோரி 16.04.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்ட

அரசாணையின்படி அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. என்றும், எஸ்.எஸ்.எல்.சி படிப்பை ஜூன் - 2012-ல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அன்னாரின் பிறந்த தேதி 09.01.1995 ஆகும் என்றும் தெரிவித்து, திரு.கு.கௌரிசங்கர், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி பணிநியமன ஆணை வழங்கப்பட்டது என்றும் தெரிவித்து, திரு.கு.கௌரிசங்கர், கோவை, தொழில்நுட்பக் கல்வி கோட்டத்தில் 27.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும், இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வரம்பிற்குட்பட்டதால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.கு.கௌரிசங்கர் என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி தக்க அரசாணை வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. தொழில்நுட்பக் கல்வித் துறையில், உதகமண்டலம் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஆய்வக உதவியாளராகப் பணிப்புரிந்த திரு.ப.குமார் என்பவர் பணியிடை மரணமடைந்ததையடுத்து, கருணை அடிப்படையில் கோவை, தொழில்நுட்பக் கல்வி கோட்டத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள அவரது வாரிசுதாரான (மகன்) திரு.கு.கௌரிசங்கர் என்பவர் அப்பதவியில் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்ய அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

3. இவ்வரசாணை மனிதவள மேலாண்மைத் துறையின் இசைவுடன் efile-1355/2023/C-2, உயர்கல்வித் துறை, நாள் 05.10.2023-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25.
செயற்பொறியாளர், தொழில்நுட்பக் கல்வி கோட்டம், கோயம்புத்தூர்.
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்வழியாக)
சம்பந்தப்பட்ட தனியர்
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்வழியாக)

நகல்
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,
உயர்கல்வித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

13/10/2023
பிரிவு அலுவலர்.

13/10/2023